வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-மலர்விழி

தேதி 2.1.2026 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------------

<u>தலைப்புச் செய்திகள்</u>

- வெளிநாட்டில் இருந்து மீட்கப்பட்ட புத்தர் உடல் எச்சங்களின் கண்காட்சியை, நாளை புதுடெல்லியில், பிரதமர் திரு நரேந்திர மோடி தொடக்கி வைக்கிறார்.
- இந்தியாவின் சீர்திருத்தப் பயணம், தொழில் நுட்பங்களால் உந்தப்படுவதாக, மத்திய அறிவியல்-தொழில் நுட்பத் துறை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறி உள்ளார்.
- தீவிரவாதத்தில் இருந்து தற்காத்துக் கொள்வதற்கான இந்தியாவின் உரிமையில், மற்றவர்கள் தலையிட முடியாது என்று, வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறி உள்ளார்.
- புதுச்சேரியில், காவலர் பணிக்கான உடல் தகுதித் தேர்வை, கோரிமேடு ஆயுதப் படை மைதானத்தில், மாநில உள்துறை அமைச்சர் திரு நமச்சிவாயம் தொடக்கி வைத்தார்.

<u>புத்தர்-மோடி</u>

உத்தரபிரதேஷ் மாநிலம் பிப்ரஹ்வா பகுதியில் இருந்து, கடந்த 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் கண்டெடுக்கப்பட்டு, 125ஆண்டுகளுக்கும் மேலாக பிரிட்டனில் தனியார் வசமிருந்த பகவான் புத்தரின் உடல் எச்சங்கள், மத்திய அரசின் தொடர்ச்சியான முயற்சிகளால் கடந்த ஜூலை மாதம் மீட்கப்பட்டதை தொடர்ந்து, புத்தர் உடல் எச்சங்களின் மாபெரும் சர்வதேச கண்காட்சி, புதுடெல்லியிலுள்ள ராய் பித்தோரா கலாச்சார வளாகத்தில், நாளை நடைபெற உள்ளது. பிரதமர் திரு. நரேந்திர மோடி,

இக்கண்காட்சியை தொடக்கி வைக்கிறார். புத்தபிரானின் உன்னத லட்சியங்களை மேலும் பிரபலப் படுத்துவதில் அரசுக்குள்ள உறுதிப்பாட்டையும், நாட்டின் வளமாக கலாச்சார பாரம்பரியத்துடன் இளைஞர்களை இணைக்க அரசு மேற்காண்டு வரும் முயற்சிகளையும் வெளிப்படுத்தும் வகையில் இக்கண்காட்சி அமைவதாக, பிரதமர் திரு நரேந்திர மோடி, சமூக ஊடகப் பதிவு ஒன்றில் தெரிவித்துள்ளார். புத்த பகவானின் உடல் எச்சங்களை மீட்க பாடுபட்ட அனைவருக்கும் பாராட்டு தெரிவித்துக் கொள்வதாகவும் அவர் கூறி உள்ளார்.

<u>ஜிதேந்திர சிங்</u>

இந்தியாவின் சீர்திருத்தப் பயணம், தொழில் நுட்பங்களால் உந்தப்படுவதாக, மத்திய அறிவியல்-தொழில் நுட்பத் துறை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறி உள்ளார். அமைச்சகத்தின் சாதனைகள் குறித்து, புதுடெல்லியில் இன்று நடைபெற்ற, அண்டு இறுதி செய்தியாளர் கூட்டத்தில் அவர் பேசுகையில், 2014-ஆம் ஆண்டில் இருந்தே அரசு, அறிவியல்-தொழில் நுட்பங்களுக்கு உயர் முன்னுரிமை அளித்து வருவதாகவும், நாட்டின் எதிர்கால வளர்ச்சிக்கு, நவீன தொழில் நுட்பங்களும், புதுமை படைப்புகளுமே ஆதாரமாக இருக்கும் என்றும் கூறினார். அறிவியல் தொழில் நுட்பத் துறையில் தனியார் துறையினருக்கு ஆதரவு அளிக்க ஓர் அரசு முன் வந்திருப்பது இதுவே முதல் முறை என்றும் அவர் குறிப்பிட்டார்.

<u>ஆண்டு இறுதி-தொழில் நுட்பம்</u>

இனி, அண்மையில் முடிவடைந்த 2025-ஆம் ஆண்டின் சாதனைகள் குறித்த சீர்திருத்தங்களின் ஆண்டு என்னும் நமது சிறப்புத் தொடரில், அறிவியல்-தொழில் நுட்பத் துறையில் இந்தியா எட்டி உள்ள சாதனைகள் குறித்து, ஒரு தொகுப்பு.....

2025-ஆம் ஆண்டில் இந்தியா, தொழில் நுட்பங்களை ஏற்கும் நாடு என்பதில் இருந்து, தொழில் நுட்பங்களை உருவாக்கும் நாடு என்ற நிலைக்கு மேம்பட்டுள்ளது. பெருமளவிலான முதலீடுகள், நிறுவன ரீதியிலான சீர்திருத்தங்கள், மற்றும், பயனுள்ள கூட்டாண்மைகள் மூலம், இது சாத்தியமாகி உள்ளது.

மனிதர்களை மையமாகக் கொண்ட, நன்னெறிகளின் அடிப்படையிலான செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்பங்களை இந்தியாவில் உருவாக்குவதற்கான, இண்டியா ஏஐ இயக்கத்திற்கு, கடந்த ஆண்டு, 10 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. துடிப்பான செயற்கை நுண்ணறிவு நாடுகள் குறித்து அமெரிக்காவின் ஸ்டேன்போர்டு பல்கலைக் கழகம் உலக அளவில் வெளியிட்ட தரவரிசைப் பட்டியலில், இந்தியா 3-ஆவது இடத்திற்கு உயர்ந்தது.

3 நானோ மீட்டர் அளவில் மைக்ரோ சிப் கணிப்பொறிச் சில்லுகளை இந்தியாவில் தயாரிக்க, கடந்த ஆண்டு நொய்டா மற்றும் பெங்களூரில், 2 ஆலைகள் தொடக்கப்பட்டன. 2025-ஆம் ஆண்டு செமிகான் இண்டியா மாநாட்டின் போது, முற்றிலும் இந்தியாவிலேயே வடிவமைத்து தயாரிக்கப்பட்ட 32-பிட் கணிப்பொறி சில்லுகள், பிரதமர் திரு நரேந்திர மோடியிடம் வழங்கப்பட்டதும், இத்துறையில் முக்கிய நிகழ்வாக அமைந்தது.

அணுசக்தி துறையில் முதல் முறையாக தனியார் நிறுவனங்களை அனுமதிக்கும் வகையில், சாந்தி மசோதா என்னும் அணுசக்தி மசோதா, கடந்த ஆண்டு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. கண்காணிப்புத் தேவைகளுக்காக இந்தியா-அமெரிக்கா ஒத்துழைப்பு மூலம் உருவாக்கப்பட்ட நிசார் என்னும் அதிநவீன ரேடார் செயற்கைகோள், கடந்த ஆண்டு வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது.

ஐதராபாத்தில் ஸ்கைரூட் ஏரோ ஸ்பேஸ் நிறுவனத்தின் இன்ஃபினிட்டி வளாகத்தை பிரதமர் திரு நரேந்திர மோடி திறந்து வைத்து, செயற்கை கோள்களை நேரடியாக சுற்றுப்பாதையில் செலுத்த வல்லதாக, முற்றிலும் தனியார் துறையினரால் தயாரிக்கப்பட்ட, நாட்டின் முதலாவது விக்ரம்-1 ஆர்பிட்டல் ராக்கெட்டையும் அறிமுகப்படுத்தினார்.

2025-ஆம் ஆண்டின் இத்தகைய சாதனைகளால், 2047-ஆம் ஆண்டிற்குள் முன்னேறிய நாடாக மேம்படுவதற்கான இந்தியாவின் அறிவியல்-தொழில் நுட்பத் திறன்களும் கணிசமான அளவில் வலுவடைந்துள்ளன.

***<u>வைஷ்ணவ்</u>***

மும்பை-அகமதாபாத் புல்லட் ரயில் பாதை திட்டத்தில், 5-ஆம் எண் மலைக் குகை அமைப்பதற்கான குடைவுப் பணிகள் வெற்றிகரமாக முடிக்கப்பட்டு, முக்கிய மைல் கல் எட்டப்பட்டுள்ளதாக, ரயில்வே அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக மகாராஷ்டிர மாநிலம் பால்காரில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் காணொளி காட்சி மூலம் அவர் கலந்து கொண்டார். புல்லட் ரயில் பாதையில், மலையைக் குடைந்து உருவாக்கப்படும் 7 குகைப் பாதைகளும், கடலடி சுரங்கப் பாதை ஒன்றும் இடம் பெற உள்ளன. நாட்டின் முதலாவது புல்லட் ரயில், அடுத்த ஆண்டு ஆகஸ்டு 15-ஆம் தேதி இந்தியாவிற்கு கிடைக்கலாம் என, ரயில்வே அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் ஏற்கனவே கூறி உள்ளார்.

***<u>ஜெய்சங்கர்</u>***

தீவிரவாதத்தில் இருந்து தற்காத்துக் கொள்வது இந்தியாவின் உரிமை என்றும், இந்த உரிமையை இந்தியா எப்படி பயன்படுத்திக் கொள்கிறது என்பதை மற்றவர்கள் நிர்ணயிக்க இயலாது என்றும் வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறி உள்ளார். இன்று சென்னை ஐஐடி உயர்கல்வி நிறுவனத்தில், சாஸ்த்ரா-2026 என்னும்

தொழில்நுட்ப-கேளிக்கை திருவிழாவை தொடக்கி வைத்துப் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

அண்டை நாடுகளில் இருந்து எல்லையின் குறுக்கே தீவிரவாதம் ஏவப்படுவதால், நீர்ப் பகிர்வு போன்ற நல்லெண்ண ஏற்பாடுகளுக்கு பலன் இல்லாமல் போவதாகவும், வன்முறையும் ஒத்துழைப்பும் ஒன்றாக இருக்க முடியாது என்றும் வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறினார். அண்டை நாடுகள் வலுவாக இருப்பதையே இந்தியா விரும்புவதாகவும், இந்தியாவின் வளர்ச்சியினால் பங்களாதேஷ் போன்ற அண்டை நாடுகளுக்கு நன்மை தான் என்றும் அவர் குறிப்பிட்டார். வெளியுலகைப் பொறுத்த வரை வசுதேவ குடும்பகம் என்பதே இந்தியாவின் நிலைப்பாடு என்றும் உலகை ஒரே குடும்பமாக கருதி, கூட்டாண்மை அடிப்படையில் பிரச்சனைகளுக்கு தீர்வு காணவே, இந்தியாவின் வெளியுறவு கொள்கையில் முக்கியத்துவம் அளிக்கப்படுவதாகவும் டாக்டர் ஜெய்சங்கர் குறிப்பிட்டார்.

***மின்னணு உற்பத்தி***

மத்திய அரசு, மின்னணு பொருள் உற்பத்தி திட்டத்தின் கீழ் 3-ஆம் கட்டமாக, மொத்தம் 41 ஆயிரத்து 863 கோடி ரூபாய் முதலீட்டிலான, 22 புதிய உத்தேசங்களுக்கு, ஒப்புதல் அளித்துள்ளது. நுகர்வோர் தேவைக்கான மொபைல் தொலைபேசி மற்றும் இதர பொருட்களையும், தொலைத் தொடர்பு, மோட்டார் வாகன உற்பத்தி, மற்றும், பாதுகாப்புத் துறையின் தேவைகளுக்கான பல்வேறு மின்னணு பொருட்களையும் உற்பத்தி செய்யும் திட்டங்கள் இதில் அடங்கும். இத்திட்டங்களால் சுமார் 34 ஆயிரம் நேரடி வேலை வாய்ப்புகள் உருவாகும் என்றும், நாட்டின் மின்னணுப் பொருள் உற்பத்தி, 2 லட்சத்து 58ஆயிரம் கோடி ரூபாய் அதிகரிக்கும் என்றும் மதிப்பிடப் பட்டுள்ளது. மத்திய மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில் நுட்பத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ், இன்று புதுடெல்லியில் இத்தகவல்களை வெளியிட்டுப்

பேசுகையில், மின்னணுப் பொருள் உற்பத்தியாளர்கள், உலக அளவில் போட்டியிடுவதற்கு ஏற்ப, உயர் தரத்தை பராமரிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். முக்கிய சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தி, துரிதமாக அமல்படுத்துவதே, பிரதமர் திரு நரேந்திர மோடி அரசின் சிறப்பு அம்சம் என்று அமைச்சர் தெரிவித்தார். புதிதாகப் பிறந்துள்ள 2026-ஆம் ஆண்டில், நாட்டில் 4 இடங்களில், செமி கண்டக்டர் உற்பத்தி ஆலைகள் நிறுவப்படும் என்றும் அவர் அறிவித்தார்.

<u>ராதாகிருஷ்ணன்</u>

2 நாள் தமிழகப் பயணமாக இன்று சென்னை வந்துள்ள குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் சென்னையில் டாக்டர் எம்ஜிஆர் கல்வி மற்றும் ஆராய்ச்சிக் கழகப் பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு மாணவர்களுக்கு பட்டங்கள் மற்றும் பதக்கங்களை வழங்கினார். இந்தியா விரைவிலேயே உலகின் 3-ஆவது மிகப் பெரிய பொருளாதாரமாக மேம்படும் என்றும் 2047-ஆம் ஆண்டிற்குள் முன்னேறிய நாடாக நாம் இருப்போம் என்றும் அவர் கூறினார். புதிய தொழில்நுட்பங்களால் வாழ்க்கையில் பல மாற்றங்கள் ஏற்பட்டு வரும் நிலையில், மாணவர்கள் காலத்திற்கேற்ப தங்களை மாற்றிக் கொள்ள வேண்டும் என, குடியரசு துணைத் தலைவர் வலியுறுத்தினார். தமிழ்நாடு சுகாதார அமைச்சர் திரு மா சுப்பிரமணியன், மாநில பிஜேபி தலைவர் திரு நயினார் நாகேந்திரன், பல்கலைக்கழக வேந்தர் டாக்டர் ஏசி சண்முகம் உள்ளிட்டோர், விழாவில் கலந்து கொண்டார். சென்னையில் இன்று பொது வரவேற்பு உள்ளிட்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் குடியரசு துணைத் தலைவர், நாளை வேலூரில் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற பின்னர், சென்னையில், 9-ஆவது சித்தா தின விழாவிலும் கலந்து கொள்கிறார்.

*காவலர் தேர்வு*

புதுச்சேரியில் இன்று காவலர் பணிக்கான உடல் தகுதித் தேர்வை கோரிமேடு ஆயுதப் படை மைதானத்தில் மாநில உள்துறை அமைச்சர் திரு நமச்சிவாயம் தொடக்கி வைத்தார். காவல்துறையில் காலியாக உள்ள 148 காவலர் பணியிடங்களுக்கான இத்தேர்வுக்கு ஆன்-லைன் மூலம் 10 ஆயிரத்து 63 விண்ணப்பங்கள் பெறப்பட்டதில் ஆள் சேர்ப்புக் குழுவின் ஆய்வில் நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் போக, 9 ஆயிரத்து 932 விண்ணப்பங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. உடல் தகுதி தேர்வு வரும் 12-ஆம் தேதி வரை நடைபெற உள்ளது. இதில் பெண் விண்ணப்பதாரர்களுக்கான தேர்வு, வரும் 11, 12 ஆகிய தேதிகளில் நடைபெறும். விண்ணப்ப தாரர்கள் தேர்வுக்கு வரும்போது, ஆதார் அட்டை அல்லது அங்கீகரிக்கப்பட்ட அடையாள ஆவணம் ஒன்றை எடுத்து வர வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

*வானிலை*

இன்று தமிழகத்தின் ஒரு சில இடங்களிலும், வட தமிழகத்தின் ஓரிரு இடங்கள், மற்றும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. கோவை, தேனி, தென்காசி மாவட்டங்களின் மலைப் பகுதிகள், மற்றும், நீலகிரி மாவட்டத்தின் ஓரிரு இடங்களில், கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அடுத்த சில நாட்களுக்கு தமிழகம் மற்றும் புதுச்சேரியில் ஓரிரு இடங்களில், அதிகாலை வேளையில் லேசான பனி மூட்டம் காணப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக நீலகிரி மாவட்டம் குன்னூரில் 26 சென்டிமீட்டர் மழை பதிவாகி உள்ளது.

***வருமான வரி***

வருமான வரித்துறை, தனிப்பட்ட நபர்களின் டிஜிட்டல் செயல்பாடுகள், வாழ்க்கை முறை மற்றும், ஆன்-லைன் செலவினங்களை கண்காணித்து வருவதாக, சமூக ஊடகப் பதிவு ஒன்றில் கூறப்படுவதை, மத்திய அரசு மறுத்துள்ளது. இது பொய்யான தகவல் என்றும், இத்தகைய கண்காணிப்புக் கட்டமைப்பு எதையும், வருமான வரித்துறை உருவாக்கவில்லை என்றும், பத்திரிக்கை தகவல் அலுவலகத்தின் உண்மை அறியும் பிரிவு தெரிவித்துள்ளது. உண்மைகளை சரி பார்த்த பின்பு மட்டுமே பொது மக்கள் எந்த ஒரு தகவலையும் நம்ப வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.